MUTHTHARASI – Art Literary Culture Tamil Journal
முத்தரசி - கலை இலக்கியப் பண்பாட்டுத் தமிழ் ஆய்விதழ்
VOLUME – III ISSUE - I
AUG -2025 E-ISSN : 2584 – 1238

# மாடியனூர் இராஜாங்கோவில் - வழிபாடும் மேன்மையும்

முனைவர் **பொ.சாமி,**(மாடியனூர் A. S. P. சாமி ராஜ்.)
இணைப்பேராசிரியர் & துறைத்தலைவர்,
வேதியியல் துறை,
வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர்.
அலைபேசி எண் : +91 94436 13294

**Abstract :**

At a time when the importance of the worship of minor deities in villages is gradually being forgotten with the passage of time, I am publishing the records obtained through field research of the people of Madiyanur village, who forget their differences and unite before the deity, regardless of their belonging to that village. My hypothesis is that this should be the case in every village.

**Key Words** : Worship - Five Kings, Lords, Village Deities - Worship Methods

மாடியனூர், இதுதான் எங்கள் ஊர். தென்காசி மாவட்டத்தில் பாவூர்சத்திரம் எனும் ஊரில் இருந்து மகாகவி பாரதியாரின் மனைவி செல்லம்மா அவர்கள் பிறந்த ஊராகிய கடையம் செல்லும் சாலையில் ஆவுடையானூர் பஞ்சாயத்தில் அமைந்துள்ளது இந்த ஊர்.

இந்த ஊரில் ஐந்து பெரிய குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 450 வரிதாரர்கள் அரசியல் பாகுபாடு இல்லாமல் ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். இவர்கள் ஒற்றுமைக்குக் காரணம் இவர்களின் குல தெய்வம் *ஐவராஜா* என்றால் அது மிகையாகாது. இந்தக் குலதெய்வக் கோவில் இந்த ஊரின் ஈசானிய மூலையில் இயற்கையாக அமைந்துள்ளது. இந்தப் பகுதி மக்கள் இந்தக் கோவிலை இராஜாங்கோவில் என அழைத்து மிகவும் பயபக்தியுடன் வழிபட்டு வருகிறார்கள்.

இராஜங்கோவில் இரண்டு பகுதிகளாக உள்ளது. தென் பகுதியில் இருப்பது ராஜா குதிரையில் வேகமாக செல்வது போல சுயமாக உருவாகி இருக்கும் வேப்ப மரம். இந்த மரம் பல ஆண்டுகளுக்கு முன்னமே பட்டுப் போயிருந்தாலும் அந்த இடத்தில் இருந்து அகற்றப் படாமல் மரியாதையுடன் மக்கள் வழிபடும் வண்ணம் பராமரிக்கப் பட்டு வருகிறது. கோவிலின் வட பகுதியினை அலங்கரிப்பது படுத்து ஓய்வெடுக்கும் மான் போலவே அடிப்பகுதி அமையப்பெற்ற அத்தி மரமாகும். இந்த அத்தி மரத்தின் கிளைகள் மானின் கொம்புகள் போலவே அமைந்திருப்பது பார்க்க அழகாக இருக்கும்.

இராஜாங்கோவில் கொடைவிழா இந்தப் பகுதியில் மிகவும் பிரசித்தி பெற்றது. இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை வைகாசி மாதம் பௌர்ணமியினை ஒட்டி வரும் வெள்ளிக் கிழமையன்று இந்த விழா கொண்டாடப் படுகிறது. ஆதியில் வாழ்ந்த தமிழ் குடியின் மாண்புகள் பல நிறைந்த இந்த விழாவின் மகிமையினை எழுத விளைகிறேன்.



http://Creativecommons.org//license/by/4.0/.

இன்றும் பாரம்பரிய முறைப்படி "வேட்டைக்குச் சென்று திரும்பிய ஐவராஜா தனது சகாக்களுடன் சேர்ந்து அன்னம் சமைத்து அதனை தனது வம்சவழி மக்களுக்கு பகிர்ந்து பனையோலைப் பட்டையில் பரிமாறி விருந்தளிக்கும் வைபவத்தை நினைவூட்டும் விதமாக" சிறப்பாக கொண்டாடப் படுகிறது.

குடும்பத்தில் அனைவரும் 15 நாட்கள் நோன்பிருந்து விழாவினை பாரம்பரிய முறைப்படி இன்றும் கொண்டாடி வருகிறார்கள். இந்த 15 நாட்களும் ஊரில் உள்ள ஆண்கள் தங்களை கோவில் வேலைக்கு அர்ப்பணித்துக் கொள்வார்கள் என்றால் அது மிகையாகாது. முதலில் ஒவ்வொரு வீடாக சென்று அவரவர் சக்திக்கு ஏற்ப வழங்கும் அவரவர் விளைவித்த அறுவடை நெல்லினை சேகரித்து அதனை மொத்தமாக அவித்து காய வைத்து உரலில் வைத்து குத்தி அரிசியாக மாற்றுவர்கள். (இப்போது மொத்தமாக சேகரித்த நெல்லினை அரிசி ஆலைகளில் கொடுத்து அரிசியாக மாற்றி வாங்கிக்கொள்கிறார்கள்.) விழாவின் போது பிடிக்கும் பனையோலை பட்டைகளுக்காகவும் மற்றும் கோவிலை சுற்றி அடைப்பதற்கு ஏதுவாகவும் பனையோலைகளை பனை மரங்களில் இருந்து வெட்டி அதனை தண்ணீர் தெளித்து முறையாக பதப்படுத்துவார்கள். மரம் வெட்டி காய வைத்து விறகு தயாரித்தல், கோவில் வளாகத்தினை சுற்றி புதராக இருக்கும் புல் பூண்டுகளை எல்லாம் வெட்டி சுத்தப் படுத்துதல், தெற்கு கோவிலை பனை ஓலை வைத்து அழகாக அடைத்தல் மேலும் சமையல் வேலை செய்ய அடுப்புகள் அமைத்தல் என அனைத்து வேலைகளும் ரொம்ப பக்குவமாக பெரியோர்களின் வழி காட்டுதலின்படி ஒவ்வொன்றாக நடக்கும். இந்த வேலைகளுக்கு கட்டாயம் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் ஆண்கள் (பெரியவர்கள், இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட) தன்னார்வமுடன் வந்து கலந்து கொள்வார்கள். திருவிழாவிற்கு முந்திய நாள் அதாவது வியாழன் இரவு இளைஞர்கள் எல்லாம் பூ பறிக்க செல்வார்கள். இந்த கோவிலில் உதிரி அரளி பூ போட்டுத்தான் பூஜை செய்வார்கள். அந்தப் பூக்களை இந்தப் பகுதி தோட்டக்காடுகளின் வேலிக் கரைகளில் வைக்கப் பட்டிருக்கும் அரளிச் செடிகளில் இருந்து, இரவு நேரத்தில் நிலவு ஒளி வெளிச்சத்தில் பறித்து, விடலி பனை ஓலையில் செய்த பட்டையில் பூக்களை அடைத்து, அழகான அந்த பூப்பட்டைகளை அதிகாலை 3 மணிக்குள் கொண்டு வந்து கோவில் வளாகத்தில் வைத்து விடும் இந்த மாடியனூரின் இளைஞர் மற்றும் சிறுவர் படை. மறுநாள் அதாவது வெள்ளிக் கிழமை மாலையில் கோவிலின் தென் பகுதியில் ராஜாவுக்கு மூன்று கும்பம் வைத்து, உதிரி அரளி பூக்களை அள்ளி வைத்து வெண் பொங்கலிட்டு சைவ படையலிட்டு, மணம் மிகுந்த பத்தி பொருத்தி, சாம்பராணி தூபமிட்டு, பன்னீர் தெளித்து, வாழை குலைகள் மற்றும் நேமிதப் பொருட்களான நோட்டு புத்தகங்கள், எழுது பொருட்கள் மற்றும் கண்ணாடி வைத்து பயப்பக்தியுடன் அனைவரும் வணங்குவார்கள். கற்பூரம் ஏற்றுவது, மாலை சாற்றுதல், தீபராதனை மற்றும் விபூதி வழங்குதல் போன்ற எந்த முறையையும் எங்கள் வழிபாட்டில் அனுசரிப்பது கிடையாது. பனையோலை வைத்து பொங்கலிட்ட அடுப்பில் கிடைக்கும் சாம்பல் மற்றும் கரி துண்டுகள்தான் எங்களுக்கு திருநீறு. இந்த பூஜையில் பக்தர்கள் நேமிதமாக வழங்கும் பன்னீர் தீர்த்தத்தை பூஜை செய்யும் பெரியோர்கள் பக்தர்கள் மேல் வேகமாக தெளிப்பார்கள். அந்த அந்தி நேரத்தில் தன் மேல் விழும் பன்னீர் துளிகள் எவ்வளவு அதிர்வலைகளை ஏற்படுத்தும் என்பது அதனை அனுபவிதவர்களுக்கு மட்டுமே தெரியும.

இந்த பூஜை முடிந்ததும் தெற்கு கோவிலை ஓலை வைத்து சாத்தி விடுவார்கள்.பின்னர் வடக்கு கோவிலில் ராஜாவுடன் 21 பரிவார தெய்வங்களுக்கும் கும்பம் அமைத்து அதற்கு அரளி பூ போட்டு,


http://Creativecommons.org//license/by/4.0/.

ஊதுபத்தி பொருத்தி, தேங்காய் உடைத்து சாம்பராணி தூபம் காட்டி பின்னர் அசைவ சமையல் வேலையினை தொடங்குவார்கள். அசைவ சமையல் வேலைகளை தொடங்கும் முன்னதாக புத்தம் புது மண் பானையில் சோறு ஆக்கி, கத்தரிக்காய், ஈருள்ளி, வாழைக்காய் மற்றும் பருப்பு போட்ட குழம்பு வைத்து அதனைஒரு பனையோலை பட்டையில் வைத்து கட்டி அந்த கட்டு பட்டச்சோறு மற்றும் எள்ளுப் புண்ணாக்கும் சேர்த்து வடக்குக் கோவிலின் கன்னி மூலையில் கட்டி தொங்க விடுவார்கள். இந்த கட்டு பட்டச்சோறும் எள்ளுப் புண்ணாக்கும் வேட்டைக்குப் போகும் எங்க வேட்டைக் காரனுக்கு என்று எங்கள் ஊர் பெரியவர்கள் சொல்லுவார்கள். ஆம் அந்த வேட்டைக்காரன்தான் அந்த இரவு மட்டுமல்ல நாங்கள் வாழும் வாழ்வு வரைக்கும் எங்களுக்கு காவல் காரன். அதனாலதான் அவனுக்கு முதல் பட்டைசோறு படையல்.

அடுத்து சமையல் வேலைகள் ஆரம்பமாகும். இந்த வேலைகள் அனைத்தும் செய்வது குடும்பத்திலுள்ள ஆண்கள் மட்டுமே. வயது வித்யாசம் பார்க்காமல் ஆர்வமுடன் அவரவர்க்கு உகந்த வேலை அதாவது சாதம் சமைப்பது (சுமார் 20 மூட்டை அரிசி), கடா வெட்டி கறி சுத்தம் செய்வது, காய் கறி நறுக்குவது, உள்ளி உரிப்பது, குழம்பு வைப்பது, பட்டை பிடிப்பது மற்றும் வேலை செய்வோருக்கு பணிவிடை செய்வது என அனைத்தும் நிலவு ஒளியில் அமர்க்களமாக நடக்கும். கோவிலுக்கு நேர்ந்து விடப் பட்டு வீடுகளில் பய பக்தியுடன் வளர்க்கப்படும் செம்மை நிறங் கொண்ட செம்மறி கிடாக்கள் மட்டுமே கோவிலில் வெட்டப்படும். இரவு கோவிலில் மின் விளக்குகள் ஏற்ற மாட்டார்கள். தக தகவென எரியும் அடுப்பின் வெளிச்சம் மேலும் தேவையானால் பனையோலையை கொளுத்தி அந்த வெளிச்சத்தில் பார்த்துக்கொண்ட படியே வேலைகள் வேகமாக நடக்கும். இந்த வேளையில் நடக்கும் நக்கல் நையாண்டி எல்லாம் ரொம்ப ரசிக்கும் வண்ணம் இருக்கும். இந்த மக்கள் விடிய விடிய இந்த வேலைகளை எவ்வித சோர்வும் இன்றி செய்வது சிறப்பு. அதிகாலை சுமார் 4 மணிக்கு இந்த வேலைகள் முடியும். சோறும் பனையோலை பட்டையும் மலை போல காட்சி தரும். ஊருக்குள் இருந்து மக்கள் எல்லாம் கோவிலுக்கு வர ஆரம்பிப்பார்கள். அந்த வேளையில் வடக்கு கோவிலில் பொங்கலிடுவார்கள். கருமை நிறங்கொண்ட வெள்ளாட்டங்கிடா வெட்டி அதனை பரணில் ஏற்றுவார்கள். அந்தப் பரணில் சேவல் ஒன்றினையும் கழுவேற்றம் செய்வார்கள். பரண் கிடா, கழுவேற்றிய சேவல், மலை போல பொங்கி குவித்து தட்டப் பட்டிருக்கும் சோறு என இந்தக் காட்சி அப்படியே, ஒன்று கூடி ஒற்றுமையாக பெற்ற வேட்டையை பகிர்ந்து உண்ணக் காத்திருக்கும் ஒரு ஆதி தமிழ் சமூகத்தை கண் முன்னே நினைவூட்டும்.

இரவு வேலை ஆரம்பித்த நேரத்தில் இருந்தே கோவிலின் முன்னே அமைக்கப்பட்டிருக்கும் அனைக்குழியில் நன்கு காய வைக்கப்பட்ட ஆண் பனையின் அலவரை விறகு இடப்பட்ட அடுப்பு கன கனவென எரிந்து கொண்டே இருக்கும். அதிகாலை பூஜை ஆரம்பிக்கும் நேரம் செஞ்சூடாக இருக்கும் அந்த அனைக்குழிக்குள் நெய்யை ஊற்றுவார்கள். தீ பெரிய சுவாலையுடன் அனைக்குழியின் வெளியே வந்து கொழுந்து விட்டு எரியும். அந்நேரம் அனைக்குழியின் உள்ளே ரெக்கையில் பொட்டு பொட்டாக இருக்கும் பெட்டைக் கோழி (முத்துப்பெட்டை) ஒன்றை போட்டுவிட்டு, எரியும் குழியை பனையோலையால் செய்யப்பட்ட படந்தால் கொண்டு மூடுவார்கள். முத்து பெட்டை உள்ளே சிறக்கடித்து படந்தாலில் பட படவென தட்டும் ஓசை கேட்கும். சற்று நேரத்தில் அந்த ஓசை அடங்கும். ஆம், விடிய விடிய எரிந்த அடுப்பில் விழுந்த கோழி கருகி விடும். அப்போது குடம் குடமாக அனைக்குழிக்குள் தண்ணீர் ஊற்றி


http://Creativecommons.org//license/by/4.0/.

வெந்து தணிந்த அடுப்பில் இருந்து கருகிய முத்துப்பெட்டைக் கோழியை எடுத்து அதனை படையலில் வைப்பார்கள். மலைப்போல பொங்கி குவிந்திருக்கும் சாதத்தில் காய்ந்த கத்திரிக் குச்சியில் துணி சுற்றி பந்தம் ஏற்றி குடும்பத்தினர் அனைவரும் பய பக்தியுடன் சாமி கும்பிடுவார்கள். அந்த நேரத்தில் கோவிலில் நல்ல பல அதிர்வலைகளை நாம் உணர முடியும்.

பொல பொலவென பொழுது புலரும் அந்த நேரம் கோவில் வளாகமே வண்ண மயமாக காட்சியளிக்கும். மாடியனூர் மக்கள் மட்டுமன்றி சுற்றியுள்ள அனைத்து ஊர்களில் இருந்தும் மக்கள் வந்து பனையோலைப் பட்டையில் வழங்கப்படும் இந்த சாதத்தினை குழம்போடு வாங்கிச் செல்வார்கள். இந்தக் கோவில் விழாவில் மேள தாளங்கள் ஏன் மின் விளக்கு அலங்காரங்கள் எதுவும் கிடையாது. கோவில் எண்ணெய் கல் விளக்கின் ஒளியும், விறகு அடுப்பின் தீ சுவாலையும் இரவு நேர பவுர்ணமி நிலவொளியும் தேவையானால் எரிக்கும் பனையோலை பந்தமும்தான் எங்களுக்கு வெளிச்சம். இரண்டாண்டுக்கு ஒரு முறை வரும் இந்த கொடை விழாவுக்கு எங்கள் ஊரின் சொந்தங்கள் எல்லோரும் எங்கிருந்தாலும் வந்து கலந்து கொண்டு தனது பங்களிப்பை அர்ப்பணிப்பு உணர்வோடு வழங்குவது விழாவின் மற்றுமொரு சிறப்பு. ஐவராஜா எனும் இந்த காவல் தெய்வம்தான் எங்கள் மாடியனூர் சொந்தங்கள் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் அவர்களை காத்து அருள் புரிகிறது என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு கொடை விழா முடிந்தவுடன் அடுத்த இரண்டு ஆண்டுகள் எப்போது வரும் என அனைவரும் ஆவலுடன் காத்திருக்கும் கொடைவிழாதான் எங்கள் இராஜங்கோவில் கொடைவிழா.

காலங்கள் மாறினாலும் பாரம்பரியத்தினைத் தனது கலாச்சாரத்தினை விட்டுக் கொடுக்காமல் கொடை விழா கொண்டாடும் ஒவ்வொரு *"மாடி வீரனும் "* எனது பார்வையில் ஐவராஜாதான்.



http://Creativecommons.org//license/by/4.0/.